தீர்க்கதரிசி !

XA: 129

தீர்க்கதரிசி

*

ஆசிரியர் :

G. K. ராமன்

*

விலை 35 காசுகள்

முகவுரை

மறைந்த மாபெரும் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் இந்த நாட்டுக்கு செய்த தொண்டுகள் ஏராளம் அவர் தமிழக மக்களுக்கு எடுத்துரைத்த பொன்மொழிகள் கணக்கிலடங்காவன. நாம் அதை விரிவாக எழுத வேண்டுமானால் நேரம் போதாது. நாட்கள் போதாது. மாதங்கள் போதாது. குறிப்பாக சிலவற்றை கூறவேண்டுமானால் நேற்று நடந்ததையும் இன்று நடப்பதையும் நாளை நடக்க போவதையும் எடுத்துக் காட்டி நமக்கு இந்த சந்ததியில் நன்மை கிடைக்காவிட்டாலும் நமக்கு அடுத்த சந்ததியில் வருபவர்களுக்கு நிம்மதியாக வாழ வழிசெய்ய வேண்டுமென்று உரைத்த உயர்ந்த உள்ளம் கொண்டவர். எளிய குடும்பத்தில் பிறந்து தன் சொல்வன்மையால் இந்த நாட்டு மக்களின் உள்ளங்களில் குடிகொண்ட உன்னத புருஷர் அறிவில் ஆழ்பெருங்கடல், அந்த ஆழ்பெருங்கடல் கடற்கரையிலே அமரராகிவிட்ட அண்ணா அவர்களை நான் ஒரு தீர்க்கதரிசியாக கருதுகிறேன் அவர் ஆத்மா சாந்தி அடைய நான் இறைவனை பிரார்த்திக்கிறேன்.

— G. K. ராமன்.

அச்சிட்டோர் : மேகலா-அச்சகம், அம்பத்தூர்

தமிழகத்தின் தவ புதல்வர் அறிஞர் அண்ணு அவர் சிறிய குடும்பத்தில் பிறந்து பெரிய வாழ்க்கை வாழ்ந்தார். அவர் தன் சுகத்தையும் பாராமல் ஏழை எளியவர்களுக்காக வாழ்ந்தார். தந்தைபெரியார் கழகத்திலிருந்து பிரிந்து, திராவிட முன்னேற்றக்கழகத்தை ஆரம்பித்தார். அவர் முதலில் சீர்திருத்த திருமணம் செய்ய வேண்டும் என்ற கொள்கையை பரப்பினுர். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற அடிப்படையில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு எளிய நடையில்பல புத்தகங்களை வெளியிட்டார். அரசியல் ஒருசூதாட்டம், பதவி, நிலையில்லாதது, பாமர மக்களின் வாழ்க்கை எப்போது நிலையானது என் மூச்சு உள்ள வரை நான் அந்த சமுதாயத்திற்காக பாடுபடுவேன் என பல மேடைகளில் முழக்கம் செய்தார். அவர் சிறை சென்ற சமயம் எப்படை தோற்பினும் இப்படை ஜெயிக்கும் என்று தத்துவக் கட்டுரைகள் எழுதியுள்ளார். அரசியல் தெரியாத குடி மக்களுக்கு நீதிதேவன், சந்திரமோகன், நல்லவன்வாழ்வான், போன்ற நாடகங்களை நடத்தி ஏழைகளுக்கு புத்திபுகட்டினுர். அராஜகம் நடத்தியவர்களுக்கு அறிவு புகட்டி எதிரிகளை கண்டால் இதமாக பேசி பெரியவர்களையும் சிறியவர்களையும் சமமாக பாவித்து உயிருள்ள அனைவரையும் தம்பிகளாகவும் தங்கைகளாகவும் தந்தையாகவும்தாயாகவும்மதித்தார். இலக்கிய மேதைகளாலும் காவியப்புலவர்களாலும் பாராட்டுதலை பெற்று கோடானகோடி செல்வமும், விலை மதிக்க முடியாத கோமேதகம், வைடூரியம் கொட்டிக் குவித்து இருந்தாலும் அங்கு ஒரு மாணவன் இல்லையேல் நான் அங்குசெல்ல மாட்டேன் என வீர முழக்கம் செய்தவர் அண்ணு.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, இம் மூன்றையும் பொருளாகக் கொண்டு மனிதன் தன் வாழ்க்கையில் முன்னேற வேண்டும். எத்தனை துன்பம் வந்த

போதிலும் ஆத்திரப் பட கூடாது அமைதியாக இருந்து செயல் பட வேண்டும், என்றும் வீரம் இருக்க வேண்டும். அதே சமயம் விவேகமும் இருக்க வேண்டும். கத்தியைதீட்டாதே புத்தியை தீட்டு என்றுரைத்தார் அறிஞர் அண்ணா. மத்திய அரசு இந்தியைகட்டாய பாடமாக கொண்டு வந்த சமயம் அன்று தமிழக மக்களுக்கு ஓர் வேண்டுகோள் விடுத்தார். தமிழர்களாகிய நாம் அன்று துக்க நாள் கொண்டாட வேண்டுமென்று துக்கம் கொண்டாட தவறியவர்கள் எனக்கு தம்பியும் மல்ல தமிழ்தாய்க்கு மகனும் மல்ல என்று பாமர மக்களுக்கு எடுத்துரைத்தவர். அரசியல் பொது சொத்து அது யாருக்கும் சொந்தமல்ல. அனைவரும அரசியலில் ஈடுபடலாம். பழக்கறிஞர்கள், பள்ளி ஆசிரியர்கள் பாமரமக்கள் அனைவருக்கும் ஆணை பிறப்பித்தார். அவர் வார்த்தைக்கிணங்க பலர் அவர் காட்டிய வழியைப் பின்பற்றினர். அகவிலை போராட்டத்தில் சிறைசென்றபோது, அவரே சட்டப் புத்தகத்தைப் படித்து நீதிமன்றத்தில் வாதாடினார். ஆறுவாரம் சிறை தண்டனை பெற்று சிறை சென்ற அவர் உலுத்தர்களின் உணவை சாப்பிடாமல் தாமாகவே சமைத்து சாப்பிட்டார் அவருடன் சென்ற நண்பர்கள் அவருக்குதவியாக இருந்தார்கள். சிறையில் அவர் பல கட்டுரைகளை எழுதினார். அவர் எழுதிய பல திரைப் படங்கள, நல்லதம்பி, சொர்க்கவாசல், வேலைக்காரி, ஓர் இரவு போன்ற படங்களுக்கு வண்ணத் தமிழில் வசனமெழுதி மக்கள் மத்தியில் வெளியிட்டார்.

1952-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று சட்டமன்றம் சென்று, பல முரட்டுக் கேள்விகளுக்கு காழ்மையாகப் பதிலளித்து அவர்களை திணற வைத்தார். திண்ணையில் படுத்துக் கொண்டாவது திராவிட நாடு கேட்பேன் என்று முழக்கம் செய்து கொண்டிருந்த அண்ணா அவர்களுக்காகவே மத்திய

அரசு பாதுகாப்பு சட்டம் கொண்டு வந்து தனிநாடு கேட்டால் கடுமையாக தண்டிக்கப் படுவார் என்றும், அவர் பொதுத் தேர்தலில் நிற்க அனுமதிக்க மாட்டார்கள் என்றும் சட்டம் இயற்றியது. அதிலிருந்து விடுபட அண்ணா அவர்கள் திராவிட நாடு கொள்கையை கை விட்டார். சில மாற்றுக் கட்சி தோழர்கள் காரசாரமாக இகழ்ந்தார்கள். கொள்கை இல்லாதகழகம் என்றும் வாய்ப் பேச்சு வீரர்கள் என்றும் பத்திரிக்கைகளில் எழுதினார்கள். இதை கேட்ட அண்ணா எதையும் தாங்கும் இதயம் உண்டு. தூற்றுபவர்கள் தூற்றட்டும் போற்றுபவர்கள் போற்றட்டும் என்று சவால் விடுத்தார். உலக உத்தமர் காந்திஜியின் உருவ சிலை திறப்பு விழாவில் மாற்றான் தோட்டத்து மல்லிகை மணம் இருக்காது என்பவன் நானல்ல என்றார். உலகம் போற்றும் உன்னத புருஷர் மகாத்மா காந்தி அவர் மாற்றுக் கட்சியிலிருப்பதால் அவர் தொண்டுகளை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது என்றார். அகவிலை போராட்டத்தில் அரசாங்க பஸ்களை கல்லாலடித்து சேதப்படுத்தினார்கள் என்றும், அதை திராவிட முன்னேற்றசழகத்தை சேர்ந்த தொண்டர்கள்தான் என்றும் குற்றம் சாட்டினார்கள். அப்போது அண்ணா என் தம்பிமார்கள் அப்படி செய்ய மாட்டார்கள் அப்படி யார் செய்து இருந்தாலும் அந்த தவறை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். என் துயரை துடைப்பவர்கள் மட்டும் என் தம்பிகள் இல்லை. எனக்கு துயரம் கொடுப்பவர்களும் என் தம்பிகள்தான் என்று உரைத்த உயர்ந்த உள்ளம் படைத்தவர். ஏழைகளின் கண்ணீர், விதவைகளின் புலம்பல், தாலி இழந்த தாய்மார்கள், வீடு இழந்த வயோதிபர்கள், வீதியில் உறங்கும் பாட்டாளிகள், வேலையில்லாத வாலிபர்கள், பள்ளிக்குச் செல்ல வசதியற்ற மாணவர்கள், இவர்களின் கண்ணீரை துடைக்கும் வரை என் கண்கள் உரங்காது என்று வீர சபதம் எடுத்தார். செல்வச் சீமான்களும், நிலச் சுவான்

தார்களும், பெரும் வியாபாரிகளும், முதலாளிகளும், நிறைந்த இந்த நாட்டில் உழைப்பாளர்கள் முன்னேற பாடுபட வேண்டும் என்பது என் நோக்கம் என்ருர்.

திருப்பரங்குன்றத்தில் மாநில மாநாடு கூட்டி பல திட்டத்தை வகுக்க முடிவெடுத்த சமயம் அண்ணு அவர்களை பூக்களால் அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் ஏற்றிக்கொண்டு வரும்பொழுது மதுரை மாநகர் மக்கள் வீதிகளை சுத்தம் செய்து கோலம் போட்டு ஆண்டவனை தொழுவது போல் தேங்காய் உடைத்து தரிசனம் செய்தார்கள். ஒரு பகுதி சைக்கிள் ஊர்வலம், மற்ருெருபகுதி கழக கொடி பிடித்து மக்கள் அணி அணியாக ஊர்வலமும், அடுத்து பெண்கள் ஆயிரக்கணக்காஞேர் கொடியின் சின்னமாகிய கருப்பு புடவையும் சிவப்பு ரவிக்கையும் அணிந்து ஊர்வலம் சென்ற காட்சியை பார்த்த அண்ணு மதுரை நகர் மக்கள் எனக்கு கொடுத்த வரவேற்பை என் உயிருள்ளவரை மறக்க முடியாத காட்சி என்றும், இவ்வளவு மக்கள் வாய்ப்பை பெற்ற எனக்கு கடவுள் போதுமான பலத்தை கொடுத்தால் தமிழக மக்களுக்கு ஆயிரத்தில் ஒன்றையாவது செய்து காட்டுவேன் என்று சொல்லி மணமகிழ்ந்தார். இந்தியா சுதந்திரம் அடைந்த ஆகஸ்ட் 15-ம் நாள் உலகஉத்தமர் காந்தி பேணி காத்த சுதந்திரம் அன்று வெள்ளையனுக்கும் நமக்கும் கணக்கு தீர்க்கப்பட்ட பதினைந்தாம் நாள். இந்த இருபது வருடம் நாம் ஆண்டபிறகு இதில் அதிகரித்த மக்கள் பலர் கல்வி அறிவு பெற்ருேர் பலர். வேலையில்லா திண்டாட்டம் தவிர்த்தவர்கள் பலர், இப்படியாக பல்வேறு பகுதிகளில் கணக்கு பார்ப்போமாஞல் இந்த ஆகஸ்ட் பதினைந்தாம் நாளை நாம் கணக்கு பார்க்கும் நாள் என்று சொல்ல வேண்டும். அரசியல் என்பது ஒரு மண்டபத்தில் நடத்த கூடியது அல்ல திட்டங்களை வகுத்து அரசியல் நடத்திஞலும் இந்திய பிரஜை ஒவ்வொருவரும் தன் குடும்பத்தில்

பங்கேற்று சிக்கன முறையில் குடும்பம் நடத்தி தன் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பி அவர்களுக்கு கல்வி அறிவு போற்றி களங்கம் இல்லாமல் அவர்களை பேணி வளர்ப்போமானால், பிறகு பின்வரும் சந்ததியில் ஜாதி வேறுபாடுகள் அகலும், உண்மையான சோஷலிசத்தை நாம் காண முடியும். அப்படிப்பட்ட ஒரு சோஷலிசத்தை இப்பொழுது என் மனக்கண்ணால் பார்க்கிறேன். காலம் வரும் காத்திருப்போம். கடமையை செய்ய தவறமாட்டோம் என்று ஆகஸ்ட் பதினைந்தாம் நாள் சுதந்திரதினத்தன்று அவர் பேசினார். திராவிட நாடு திராவிடருக்கே என்று முழக்கம் செய்தார். தமிழ் நாடு, கேரளம், ஆந்திரம், கன்னடம், இப்படி நான்கையும் ஒன்று சேர்த்து திராவிட நாடு திராவிடருக்கே என்றார். நமக்கு முன்னோர்கள் ஏற்படுத்திய நாடு நாம் அன்றாட வழிபடும் தேசீய கீதத்திலும் அதை பார்க்கலாம். முடியும்போது, திராவிட, யுக்சல, வங்கா என்று முடிகிறது இப்படியிருக்கும் திராவிடநாட்டை நாம் கேட்டால் அதற்கு தடைபோட்டு நம் வாயை கட்டி விடுகிறார்கள். ஆஸ்தான கவிஞர்களும் அரசியல் மேதைகளும் புலவர்களும் அரும்பெரும் தியாகிகளும் ஏற்றுக்கொள்ள கூடிய விஷயம் இது தேர்தல் காலத்தில் அவர் கடைப்பிடித்த அஹிம்சா முறைகள் அராஜகம் நடத்தினால் மக்களுக்கு ஆபத்து வருமே என்று தெரிந்து அஹிம்சா முறையை கடைப்பிடித்தார். எதிர்கட்சிக்காரர்கள் பலவழிகளில் அராஜகம் நடத்தி பல தீயவழிகளில் ஈடுபட்டார்கள். அப்படியிருந்தும் அவர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய இம்மூன்றையும் கடைப்பிடித்து படிப்படியாக நாளுக்கு நாள் கொஞ்சம், கொஞ்சமாக திராவிட முன்னேற்றக்கழகத்தை வளர்த்தார். அமைதியான முறையில் நாம் நடந்துகொண்டு காந்திஜியின் கொள்கைகளை கடைப்பிடித்து நல்லதொரு சமுதாயத்தை உருவாக்குவோமானால், அதில் காணும்

இன்பம் அதிகம். பானை செய்யும் குயவனுக்கு பல நாள் வேலை தடியெடுத்தவனுக்கு சில நிமிடம் அராஜகம் நடத்தினால் அழிவு அதிகம். அஹிம்சா முறையை கடைப்பிடித்தால் நஷ்டம் யாருக்கும் இல்லை என்று உரைத்த உத்தமர் அண்ணா அகநானூறு, புறநானூறு சிலப்பதிகாரம், கிறிஸ்துவர் பைபிள், மகமதியர் குரான் போன்ற புத்தகங்களை படித்தது மட்டுமல்லாமல், அதை அஹிம்சா முறையில் பயன்படுத்தினார். அவர் கொண்டு வந்த பல்வேறு கருத்துக்களை மக்கள் மனதில் ஏற்றுக் கொண்டு எங்கெல்லாம் தமிழர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் குறிப்பாக சிங்கப்பூர், மலேயா, இலங்கை, இப்படியாக பல்வேறு துறைகளில் அண்ணாவின் கருத்துக்களை மனதில் கொண்டு தமிழர்களுக்கெல்லாம் தலைவர் அண்ணா என்று முடிவு செய்து, அவர் காட்டிய வழியை பின் தொடர்ந்தார்கள். கருத்துத் தெரிந்த சிறிய குழந்தையிலிருந்து வயது முதிர்ந்த கிழவர்கள்வரை அண்ணாவின் தம்பிகளாக விளங்குகிறார்கள். அன்னிய நாட்டான் நம் நாட்டு மீது படையெடுத்தபோது அண்ணா விடுத்த உரை, சீனா நம் நாட்டின் மீது படையெடுத்து இருக்கும் எந்த நேரத்தில், நாம் கட்சி பாகுபாடுகளை மறந்து ஒன்று சேர்ந்து நம் பலத்தைக் காட்ட வேண்டும். அப்படி செய்யத் தவறினால் அவர்கள் உண்மையான ஜனநாயகவாதிகள் அல்ல என்பதை நினைவு படுத்துகிறேன். தாய் தந்தையரை மறந்து, வீடுவாசலை மறந்து, மனைவி மக்களை மறந்து, மழலை பேசுகின்ற குழந்தைகளை மறந்து உற்றவர் பெற்றவரை மறந்து உயிருக்கு போராடிக்கொண்டிருக்கும் இந்த சமயத்தில் நாம் இங்கு கட்சியில் பிளவு ஏற்படுத்திக் கொண்டால், நம் போர் வீரர்கள் களத்திலே ரத்தக்கண்ணீர் வடிப்பார்கள். அந்த நிலை ஏற்படாமல் நாம் தடுக்க கட்சிக் கொள்கைகளை மறந்து அன்னிய நாட்டாரை விரட்ட முழு முயற்சி எடுக்க வேண்டும்' என்றார். அவர்

விவசாயிகளுக்கு உரை நிகழ்த்தும்போது இந்த நாட்டில் போதுமான நிலம் இருந்தும் குறைவான ஊதியம் கிடைக்கிறது. காரணம் இந்த பத்தாண்டு காலத்தில் உரம்போட்டு நிலத்திலிருந்து சத்துக்களை எடுத்துவிட்டார்கள். ஆகையால் உரம்போட்டு விவசாயம் செய்வதை தவிர்க்கப்பட வேண்டும். இப்போது உரம் போட்டுத்ததான் பயிரிட வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அரசு இருக்கிறது அதிகாரிகள் இருக்கிறார்கள் இனி அவர்கள் பார்த்துக்கொள்வார்கள் என்று நினைப்பது தவறு. அரசு நல்ல முறையில் இயங்க வேண்டுமானால் விவசாயிகளும் தொழிற்சாலைகளும் நல்ல முறையில் இயங்க வேண்டும். விவசாயிகளுக்கு அதிக நெல் விளைச்சல் என்றால் அமைச்சர்களுக்கு சந்தோஷம். தொழிற்சாலைகள் அமைதியான முறையில் நடைபெறுகிறதென்றால் அதிகாரிகளுக்கு வேலை பளு குறைவு. இப்படியாக எல்லா குடிமகன்களும் பாடுபட வேண்டும். அரசாங்கமும் பொது மக்களும் ஒன்றுசேர்ந்து பாடுபட்டால் உண்மையான ஜனநாயகத்தை நாம் காண முடியும். உள்ளத்தில் ஊக்கமும் உடலில் உழைப்பும் மனதில் உற்சாகமும் வைத்து பாடுபட்டால் நிச்சயம் நமக்கு பலன் உண்டு. மேல்நாடு திரும்பிய அண்ணா விவசாயிகள் மகாநாட்டில் பேசியதாவது அமெரிக்காவில் விவசாயம் செய்பவர்களை கூர்ந்து கவனித்தேன். அங்கு நூற்றுக்கு பத்துபேர் விவசாயம் செய்கிறார்கள். இந்தநாட்டில் நூற்றுக்கு அறுபது பேர் விவசாயம் செய்கிறார்கள். காரணம் இங்கு தண்ணீர் பற்றாக்குறை. இங்கு இருக்கும் மண் வளம் தான் அங்கு இருக்கிறது ஆனால் அங்கு விவசாயம் செய்ய இரண்டு பேர் இருந்தால் போதும். மற்ற எல்லா வேலைகளையும் இயந்திரம் செய்கிறது. இந்த நாட்டில் அப்படியல்ல. அங்கு குறைந்த ஆட்களைக் கொண்டு அதிக உற்பத்தியை பெருக்குகிறார்கள். இங்கு அதிகமாக ஆட்களைக்கொண்டு குறைந்த உற்பத்தியை

பெருகிறோம். அமெரிக்காவில் ஒரு விவசாயின் மகன் B. A. படித்திருந்தாலும் M. A படித்திருந்தாலும் B. Com. படித்திருந்தாலும் Bar at Law படித்திருந்தாலும் கல்லூரியிலிருந்து வந்ததும் தன் வயலில் இயந்திரத்தை எடுத்துக் கொண்டு வேலை செய்ய தொடங்குகிறார்கள். அவர்கள் அதை வயல் வேலையாக கருதாமல் இயந்திர வேலையாக கருதுகிறார்கள். ஆனால் இந்த நாட்டில் ஒரு விவசாயி மகனுக்கு நமக்கு எங்கு நிலம் இருக்கிறது அது எப்படி விளைகிறது என்று கூட தெரியாது. உழைப்பு நாட்டுக்கு மிகவும் முக்கியம், எந்த நாட்டிலும் உழைப்பு இல்லாவிட்டால் நாடு இருக்காது. வானத்தை முட்டும் கோபுரங்கள், உழைப்பு அங்காடிகள், உழைப்பு துறைமுகம், ரோடுகள் கால்வாய்கள் அணைக்கட்டுகள் இப்படியாக எந்த துறைகளில் எடுத்தாலும் உழைப்பு. உழைப்பு இருந்தால்தான் உயரமுடியும் என்ற கருத்தைக் கொண்டு நாம் செயல் பட வேண்டும். சீரணி படையினர் விழாவில் சீரணி படையினர் காட்டும் உற்சாகத்தையும், உணர்ச்சியையும் கண்டு நான் அளவிலா ஆனந்தம் அடைகிறேன். இப்படி சீரணி படையினர் ஒன்று சேர்ந்து பொதுக்காரியங்களில் தலையிட்டு காரியத்தை செய்தால் அதிகாரிகளுக்கும் வேறு பல வேலைகளை கவனிக்க ஏதுவாக இருக்கும் என்றார். அவர் தலைமையில் நடந்த உலகத் தமிழ் மாநாடு தமிழர்கள் கண்டிராத மாபெரும் மக்கள் கூட்டம் அன்னிய நாட்டவர்கள் வியப்புற்று தமிழைப் பற்றி விவாதித்த தமிழ் காவியங்கள் ஏராளம். பழம் பெறும் தியாகிகளுக்கு சிலைகள், பாட்டுக்கொரு புலவன் பாரதிக்கும் சிலை, கற்புக்கரசி கண்ணகிக்கும் சிலை, கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி. க்கும் சிலை, இப்படியாக பத்து சிலைகளை வைத்தார். தமிழ் அறிஞர்களும், தமிழ் புலவர்களும், பாராட்டும் வகையில் எல்லோருக்கும் சம உரிமையில் பங்கேற்று நடத்திய உலகத் தமிழ் மாநாடு பார்ப்போர்

கள் பரவசப்படும் அளவுக்கு பந்தல்களும், அன்னிய நாட்டார்கள் அசந்து போகும் அளவுக்கு அதன்முன் புரத்து காட்சி இந்திய சின்னமாகிய அசோக சின்னத் தால் அலங்கரிக்கப்பட்ட காட்சி அனைவரையும் மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தியது ஆரம்ப முதல் முடியும் வரை அழகாக அலங்கரிக்கப்பட்ட டிரக் வண்டிகளில் வண்ணச் சிலைகளை அமைத்து அதற்கு முன்னால் சிலம்பு ஆட்டங்களும், தமிழ் நடனங்களும். நாதஸ்வர இசையும், இப்படிப்பட்ட காட்சிகளை காணாத கண்கள் பாப கண்கள் என்று கூறலாம். இவ்வளவு திறம்பட நடத்தி காட்டி மக்களிடம் அன்பும் ஆதரவும்பெற்றவர் அறிஞர் அண்ணா அவர்கள். அடுத்து அவர் தலைமை யில் நடந்த உலக பொருட்காட்சி ஆயிரம் ஆயிரம் மக்கள் குடியிருக்கும் அண்ணா நகர் என்று சொல்லக் கூடிய இடத்தில் பல நாடுகளிலிருந்து கொண்டு வரப் பட்ட அலங்கார பொருள்களும் பிளாஸ்டிக் சாமான் களும் பிரமாண்டமான இயந்திரங்களும் நுட்பமான வேலைபாடுகள் நிறைந்த ரப்பர் பொம்மைகளும் தானாக இயங்கும் இயந்திரங்களும் டெலிவிஷன் ரேடியோக் களும் டிரான்ஸிஸ்ட்டர் ரேடியோக்களும், ஆண்கள் அணியக் கூடிய அங்கிகளும் பெண்கள் அணியக்கூடிய புடவைகளும் சுலபமான முறையில் அமைத்து சிற்றுண்டிசாலைகளும் தண்ணீர் குழாய்களும் அழகான வீதிகளும், எத்திசையிலி ருந்து பார்த்தாலும் தெரியக்கூடிய அளவுக்கு மணிக் கூண்டும் அங்கு செல்வோர்களுக்கு ஸ்பெஷல் பஸ் களும் வெளியூர் மக்கள் தங்கும் வசதியும் பஸ்களும் கார்களும் தங்குவதற்கு தனி இடம் அமைத்து இந்தி யாவில் பல்வேறு மாநிலங்களிருந்தும் பல்வேறு நாடு களிலிருந்தும் வந்திருந்த மக்கள் ஏராளம் ஏராளம் எந்த பொருள் எடுத்தாலும் விலை மலிவாகவும் தரத்தில் உயர்ந்ததாகவும் மக்கள் வாங்கினார்கள். சிம்லா டவர் என்று சொல்லக்கூடிய அந்த மண்டபத்தை மின்சார

விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட காட்சி தமிழர்கள் மறக்க முடியாத காட்சி. இத்தனையும் நடத்தி மக்களை அன்புக்கடலில் மூழ்க வைத்தார்.

அவர் 1967-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று தமிழக அரசை கைபிடித்தார். தமிழ்நாடு கவர்னரிடம் முதல் சந்திப்பிலேயே, பழகுவதற்கு இனிமையானவர் என்று பெயர் வாங்கினுர். இதுவே அண்ணுவுக்கு வெற்றிக்கு அறிகுறியாக இருந்தது. அதுமுதற்கொண்டு அவர் செய்த எல்லா காரியங்களும் வெற்றி வாய்ப்பை தேடித்தந்தன அரும்பெரும் தியாகி அண்ணு அவர்களை அமெரிக்கா அழைத்தது அழைப்பிற்கிணங்க அண்ணு அமெரிக்கா சென்றுர். யேல் பல்கலைக் கழகம் மாணவர்களை சந்தித்து மணமகிழ்ந்தார். அங்கு பல முரட்டுக் கேள்விகளுக்கு தக்கபடி பதிலளித்து கவுரவப் பட்டம் பெற்றுர். அமெரிக்காவில் அண்ணு அவர்கள் சென்ற இடமெல்லாம் அரும்பெரும் தியாகி என்றும், நல்ல அரசியல்வாதி என்றும், மக்கள் மதிப்பைப் பெற்ற மாவீரர் எனவும் அமெரிக்கா புகழ்ந்தது தனது ஓருமாத சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு இந்தியா திரும்பினுர். அமெரிக்காவில் அவர் கண்ட காட்சிகளை பற்றி பல இடங்களில் பேசினுர். அந்த நாட்டிற்கும் இந்த நாட்டிற்கும் உள்ள வித்தியாசத்தை பற்றி விளக்கினுர்.

அண்ணு ஓர் சிறப்புமிக்க அரசியல்வாதி தியாகச் சுடர். தமிழ்க் காவியம் தரணியெல்லாம் போற்றும் தவ புதல்வர் கலை உலகில் திருப்பத்தை செய்த கலைஞர்களின் மேதை. பல நாடங்களில் நடித்து நாட்டு மக்களுக்கு நற்புத்தி புகட்டிய நாவலர். ஊரெல்லாம் போற்றும் உன்னத புருஷர், மாற்றுக் கட்சிக்காரர்களிடம் நயமாகபேசி தன் வசம் சேர்த்துக் கொண்ட மாமேதை, நீதி தேவன் நாடகத்தில் நடித்த தென்னுட்டு பெர்னுட்ஷா என்ற பட்டத்தை பெற்றவர். ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தை காட்டு

என்று சொன்ன அண்ணல் காந்திஜியின் வழியை பின் தொடர்ந்து தென்னாட்டு காந்தி என்று பட்டத்தை பெற்றவர். விரோதிகளை கண்டால் நண்பர்களாக பழகுவார். மாற்றுக்கட்சிக்காரர்களிடம் நாம் பழகினால் தான் நம்மிடம் அவர்கள் பழகுவார்கள் என்று அடிக் கடி எடுத்துரைப்பார். மேடைகளில் அவர் பேசும் போது நகைச்சுவையை கலந்துபேசுவார். சிறுகதை கள் சொல்வார், நபிநாயகம் பற்றியும், கிறிஸ்துதவ ஏசு நாதரைப் பற்றியும். தமிழ் கடவுள் முருகனைப்பற்றியும் சொல்வார். அவர் கற்ற நூல்கள் கணக்கிலடங்காவன. துவண்டு கிடந்த மக்களை தட்டி எழுப்பி அரசியல் என்ன என்பதை உணர்த்திய அரும்பெருந் தலைவர். அண்ணா ஓர் இலட்சியவாதி. திட நம்பிக்கையுடன் எந்த காரியத்தையும் செய்வார். அன்பு, அறம் பொருள், காதல், முத்து, இவையனைத்தும் அமையப் பெற்றவர் அறிஞர் அண்ணா. ''தனியொருவனுக்கு உணவு இல்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்'' என்று வீரமுழக்கம் செய்த பாரதியின் வழியில் வந்த வர். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற அடிப் படையில் கலப்பு திருமணத்தை சட்டமாக்கியவர் அண்ணா. குடும்ப கட்டுப்பாடு திட்டத்தில் தமிழ் கட வுளாகிய சிவபெருமானுக்கே இரண்டு குழந்தைகள், ஒன்று முருகர், மற்றொன்று விநாயகர் என்று எடுத்து உரைத்தவர்.

போராட்ட காலத்தில் நடிகர்களுக்கு விதிவிலக்கு அளித்தவர். நடிகர்கள் போராட்டத்தில் கலந்து கொள்ளக்கூடாது என்று ஆணை பிரப்பித்தார். கோமேதகம், வைடூரியம், தங்கம், முத்து இப்படிப் பட்ட விலை உயர்ந்த பொருள்களும் அவருக்கு ஈடு ஆகாது. அறிஞர் அண்ணாவின் பேச்சுக்கு எப்படிப் பட்ட பொருளும் எடுத்தால் குறைந்துவிடும். ஆனால் அண்ணாவின் ஆற்றலும் திறமையும் என்றென்றும் குறையாத பொருள். ஒவ்வொரு குடிமகனும் தன்னால்

முடிந்தவரை உழைத்து உற்பத்தியை பெருக்க வேண்டும். அப்போதுதான். அகவிலையும், பதுக்கலையும், நாம் ஒழிக்க முடியும் என்பார். மனிதனுக்கு ஆத்திரம் வரும் பொழுது அமைதியை கடைபிடிக்க வேண்டும். ஆத்திரம் அறிவின் சத்ரு, ஆத்திரத்தால் எதையும் சாதிக்க முடியாது, அறிவால் காரியத்தை சாதிக்க முடியும் என்று உரைத்தவர். வானிடிந்து விழுந்திடினும் அச்சமில்லை அச்சமில்லை அச்சம் என்பதில்லையே என்ற மனோதைரியம் படைத்தவர். குமுறும் எரிமலை, கொந்தளிக்கும் கடல், இயற்கையின் சோதனை எதுவந்திடினும் அச்சமில்லை அச்சம்மில்லை என்றார் அவர் பதவிக்கு வந்த குறுகிய காலத்தில், படி அரிசி திட்டத்தை கொண்டு வந்து மக்களுக்கு வழங்கினார். இன்னும் பல் வேறு துறைகளில் மக்களுக்கு நன்மை செய்துக் கொண்டு வரும் சமயத்தில் அவர் உடல் நலம் சரியில்லாமல் சென்னை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பல பெரிய மருத்துவர்கள் அவர் உடலை பரிசோதனை செய்து பார்த்து, அண்ணனுக்கு வந்து இருக்கும் நோய் மிகவும் கொடுமையானதுஎன்றும், அதை உடனடியாக தீர்க்கபட வேண்டும் என்று தெரிவித்த பிறகு, மத்திய அரசு அனுமதியின் பேரில் வெளிநாடு சென்றார் அங்கு ஆற்றல் படைத்த மருத்துவ நிபுணர்கள் அண்ணாவின் உடலை பரிசோதனை செய்து, கடைசியில் அறுவை சிகிச்சையில் ஈடுபட்டார்கள். வெற்றிகரமாக சிகிச்சையை முடித்த பிறகு,சில நாட்கள் அங்கு ஓய்வு எடுத்துக் கொண்டு இந்தியா திரும்பினார்.

அமெரிக்க நிபுணருக்கு தங்க பதக்கமும் வழங்கப்பட்டது தமிழகம் திரும்பிய அண்ணா தளராமல் வீர நடை போட்டு பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். முதல் நிகழ்ச்சி தமிழ்நாடு பெயர் மாற்றம். இதில் கலந்து கொண்ட அண்ணா இந்த நாளை நாம் பல வருடங்களாக, பல மாதங்களாக, பல நாட்களாக எதிர் பார்த்துக் கனவு

கண்டுகொண்டிருந்தோம். தமிழர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஓர் பொன்னாள், தரணியர் போற்றும் நன்னாள். இங்கு கூட்டப்பெற்ற இத்திருநாளில் நான் கலந்துகொள்ளும் முதல் நிகழ்ச்சி எனக்கு உடல்நலம் போதுமான அளவுக்கு இல்லாவிட்டாலும் தமிழ் நாடு பெயர் மாற்றம் என்றவுடன் எனக்கு உணர்ச்சி அதிக ரித்து அவர்கள் என்னை அழைக்காவிட்டாலும் நானே இங்கு வந்துவிடவேண்டும் என்ற எண்ணம் தோன்றி யது. தமிழர்களின் நீண்டநாள் ஆசையை பூர்த்தி செய்கிறோம் என்ற உணர்வுடன் இங்கு வந்தேன். நீங் கள் காட்டும் இந்த உணர்ச்சியை பார்த்து நான் பெரும் மகிழ்ச்சியடைகிறேன் என்றார்.

நியூயார்க் நகரில் சிகிச்சை பெற்று தாயகம் திரும் பிய அண்ணா அவர்களைக் காண சென்னை நகரில் ஆனந்தமும் ஆர்வமும் கரைபுரண்டோட மக்கள் வண்ண,வண்ண உடையணிந்து மலர்ந்த முகத்துடன் ஒருவரோடொருவர் போட்டியிட்டுக் கொண்டு அணுகி னார்கள் விமான நிலையத்திற்கு. பிறர் மனம் புண்படாத படி நடப்பதும், நோகாதபடி நடப்பதும், பேசுவதும அவர் இயல்பு அண்ணா தாயகம் வந்தடைந்த செய்தி நகர் முழுவதும் வெகு விரைவில் பரவிவிட்டது. பொது மக்கள் அனைவரும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர். மக் கள் வெள்ளத்தைக் கண்ட அண்ணா அவர்கள் இன் முகத்துடன் அனைவரையும் வரவேற்றார்கள். அயல் நாடு சென்று உடல் பூரண குணமடைந்திருக்கிறேன். இப்போது உடல் நல்லபடியாக இருக்கிறது என்று அவர் சொல்லாமலே புன்னகை புரிந்தார். அண்ணா அவர்களுக்கு வரவேற்புக் கொடுக்க யாரும் விமான நிலையத்திற்கு வரவேண்டாம் என்று கழகம் விடுத்த கோரிக்கையின் பேரில் பொதுமக்கள் கட்டுப்பாட்டு டன் கலந்துசென்றார்கள். அமெரிக்க மருத்துவர் கட்டளைக்கிணங்க அவருக்கு தனிவீடு தயார் செய்து

குளிர்ச்சாதனவசதி (ஏர்கண்டிஷன்) பொருத்தினார்கள். ஆனால் அண்ணா அவர்கள் எனக்கு இவ்வளவு சுக மான வீடு தேவையில்லை என்று மறுத்து விட்டார். அவர் உடல் நலம் சரியில்லாத நேரத்தில் கூட அவர் ஆடம்பரத்தை விரும்ப வில்லை. மக்கள் சுகமே தன் சுகம் என்று கருதிய கர்மவீரர். அமெரிக்க மருத்துவர் மூன்று மாதத்திற்குமேல் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கட்டளை பிறப்பித்திருந்தும் அவர் தன் உடலையும் பொருட்படுத்தாமல் பல நிகழ்சிகளில் கலந்துக்கொண்டு மக்களுக்குத் தொண்டாற்றினார். அவர் வாழ்ந்த நாளெல்லாம் தன்னை அழகு படுத்திக் கொள்ளாமல் பிறரை அழகு படுத்த வேண்டும் என்ற எண்ணமுடன் வாழ்ந்தார். பிரருக்குக்காக வெளிச்சத் தை கொடுத்து தன்னைத் தானே எரித்துக் கொள்ளும் மெழுகுவத்தியை போல நல்ல உடையணியாமல் தலை சீவாமல் அழுக்கு உடையை உடுத்திக் கொண்டிருப் பார். தொழிலாளர்களையும், முதலாளிகளையும் யூனியன் தலைவர்களையும், சமபடுத்தி அவர்ரவருக்கு தகுந்தாற் போல் நயமாக எடுத்துரைப்பார்.

கோபமாக வருபவர்களையும், அவர் வார்த்தை களால் சாந்தப்படுத்தி விடுவார். பொருளாதார நெருக் கடியின் காரணமாக ஏழைகளிடம் பொருமையும், பூசல் களும், அதிகரித்து இருக்கிறது அதை தடுப்பதற்கு ஒரே வழி ஒருவருக்கொருவர் தீமை செய்யாமல் வாழ்க் கை நடத்த பாடுபட வேண்டும். அடுத்த வீட்டாரை அண்ணனாகவும், எதிர் வீட்டாரை தம்பிகளாகவும், தாய்மார்களை தாயாகவும், தங்கைகளாகவும், நேசிக்க வேண்டும். நம்மிட மிருக்கும் பொருமையும், பூசலும் அகன்றால் நாம் முன்னேற ஏதுவாக இருக்கும். மற்ற நாட்டவர்களால், தமிழர்கள் மிகவும் திரமையுள்ளவர் கள், அவர்கள் எதையும் சிந்தித்து செயல் படுவார்கள், என்று போற்றும் அவர்களுக்கு நாம் ஒரு எடுத்துக்

காட்டாக விளங்க வேண்டும், நாம் தவறு செய்தால் மறுமுறை திருத்திக்கொள்ள வேண்டும். அடுத்தவர்கள் தவறு செய்யும் போது அதை அவர்களுக்கு சுட்டிக் காட்டி திருத்த முயற்சி செய்ய வேண்டும். நம் நாட்டில் பொருளாதாரம் பெருக வேண்டுமானல் விவசாயிகள் முன்னேற வேண்டும். விவசாயிகள் முன்னேற பொது மக்கள் ஒத்துழைப்பு தர வேண்டும். இப்படி ஒருவரொ டொருவர் பிணைந்து பல கஷ்டங்களை அனுபவித்து நாட்டில் பொருளாதாரத்தை பெருக்கினல், நமக்கு பின் வரும் சந்ததிகள் சுகமாக வாழமுடியும். நம் தமிழகத் தில் பலர் வந்து குடியேறி உள்ளார்கள். குறிப்பாக கேரள, கன்னடம், ஆந்திராவிலிருந்தும் மற்றும் பல் வேறு மாநிலங்கலிருந்தும் வந்தவர்களை நாம் சகோதரர் களாக பாவித்து செயலில் ஈடுபட வேண்டும். என்று எடுத்துரைத்த உத்தமர்.

சென்னையில் நடந்த மாநில மாநாட்டில் பார்ப்போர் பரவசப்படும் அளவுக்கு கழகத் தோழர்களும், பொது மக்களும், கலந்துக் கொண்டு சிறப்பாக நடைபெற்ற தில் அறிஞர் அண்ணு, நிகழ்த்திய உரைகள். இந்த நாட்டில் அகவிலையும், அரிசி பஞ்சமும், இந்தி திணிப் பும், வேலையில்லாத் திண்டாட்டம், இவைகளை முதலில் ஒழிக்க வேண்டும். இதுவும் போதாமல் இன் னும் ஏழு கோடி ரூபாய் வரி போட டெல்லி சர்க்கார் காத்துக் கொண்டுருக்கிறது. திராவிட முன்னேற்ற கழகத்திற்கு ஓட்டுப் போட்டால் அதை தடுத்து நிறுத்த முடியும், ஆளுங்கட்சிக்கு ஒட்டுப் போட்டால் மேலும் வரி பளுவை நம்மீது சுமத்துவார்கள் என்பதை உங்க ளுக்கு சுட்டிக்காட்டுகிறேன். நமக்கு விரோதிகளையும், நண்பர்களாக பழக வேண்டும். மறப்போம், மன்னிப் போம் என்ற தத்துவத்தை ஒவ்வொருவரும் கடை பிடிக்க வேண்டும் என்ருர். தமிழக மக்கள் என்ற குழந்தைகளுக்கு அரசியல் என்ற பாலை ஊட்டி வளர்த்

தவர். தமிழகத்தின் வீர ரென்பர். தரணியர் போற்றும் தீர ரென்பர். அரசியல் மேதை என்பர். அனைத்தும் கற்ற அறிஞ ரென்பர். அறிவில் தந்தை என்பர் குணத்தில் குழந்தை யென்பர். கவிதை எழுதும் மன்னனென்பர் மக்களை மயக்கும் கண்ணனென்பர். நாடக நடிகரென்பர். நகைச்சுவை மன்னனென்பர். தீயவர் தியாகி யென்பர். மாதர்கள் மாமேதை யென்பர். சொல்லின் செல்வரென்பர். ஊர்போற்றும் உத்தமரென்பர். காவியக் கலைஞரென்பர். தமிழைக் காத்த தியாகி யென்பர். பேரறிமன்ன னென்பர். ஏழைகளின் தலைவரென்பர். எளியவர்களுக்கு தலைவரென்பர். நல்லவர்கள் நாவல ரென்பர். தமிழ்நாட்டின் காவல ரென்பர். தியாகச் சுடரென்பர், தூய உள்ளம் கொண்டவரென்பர், ஆண்கள் அறிஞரென்பர் பெண்கள் அண்ணா என்பர், நடராசருக்கு உதித்த தங்கமென்பர், காஞ்சிபுரம் தந்த சீதனமென்பர் இவை அனைத்தும் பெற்ற அறிஞர் அண்ணா அவர்கள் இக்குறிய காலத்தில இந்நாட்டிற்கு செய்த தொண்டு மிகவும் அதிகம்: இனிமேல் அவர் இந்த நாட்டில் இருந்தால் அடுத்த நாட்டவர்கள் ஆச்சரியப்படும் அளவுக்கு செம்மையாக்கி விடுவாரோடு என்ற எண்ணமோ என்னவோ இந்தப் பாரதத்தாய்க்கு நீ இந்த நாட்டில் இருத்தது போதும் என்று சொல்லி தன்னுடன் அழைத்துப் போய்விட்டாள். அந்தக் குழந்தை உள்ளம் கொண்டவரை, கோபம் என்னவென்றும் அறியாதவரை, தவறு செய்யத் தெரியாதவரை, தமிழ் மக்களுக்காக உழைத்தவரை கொண்டு போக எப்படித்தான் மனம் வந்ததோ தெரியவில்லை. இந்தியாவில் பல பெரிய தலைவர்களின் உயிரைக் கொண்டுபோவ அந்த பாரதத்தாய்க்கு தமிழக மக்கள் கண்ணுக்குத் தெரியாத கடவுளை நம்புவதைவிட கண்ணுக்குத் தெரிந்த அண்ணாவை கடவுளாக மதித்து வந்தார்கள்:

அந்த மாமேதையை தன்நலம் கருதா தியாகியை ஜீவகாருண்ய சீலரை நீ கொண்டுபோனது ஏன்? வேதனை புயலில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த தமிழர்களை உங்கள் குறைகளை தீர்க்கும் வரை என் கண்கள் உறங்காது என்று வீர சபதம் ஏற்ற வீராங் கனை நீ கொண்டுபோனது ஏன்? ஒருவனுக்கு உணவு இல்லையேல் உலகத்தை அழித்திடுவோம் என்று சொன்ன பாரதியின் வழியில் வந்த உத்தமரை நீ கொண்டு போனது ஏன்? உலுத்தர்களும் ஊதாரி களும் தன் நிகரில்லா உண்மத்தம் பிடித்தவர்களும் உலாவும் இந்த நாட்டில் உலக உத்தமரை மட்டும் நீ கொண்டு போனது ஏன்? இவரா அரசியல் நடத்த போகிறார் என்று கேலி சிரிப்பு சிரித்தவர்களுக்கு இது தான் அரசியல் என்று செய்து காட்டி, அவர்களிடமே அரசியல் மேதை என்று பாராட்டுதலை பெற்றவரை நீ கொண்டுபோனது ஏன்? அந்த ஏன் என்ற கேள் விக்கு விடை தெரியாமல் கரைமேல் புரண்ட மீனை போல் தவித்துக்கொண்டிருக்கும் தமிழக மக்களின் கண்ணீர் ஊற்று. அண்ணாவின் போதனைகளின் மூலம் தமிழக மக்கள் நல்ல ஆக்கத்தையும் ஊக்கத்தையும் ஆறுதலையும் தெம்பையும் பெற்று வாழ்ந்தார்கள். அந்த ஊர்போற்றும் உத்தமரை நீ கொண்டுபோனது ஏன்? போதும் உன் திருவிளையாடல் இத்துடன் நிறுத்திக் கொள்.

பொய் சொல்லாதே, திருடாதே, விபச்சாரம்செய்யா தே, குடிக்காதே, சூது ஆடாதே, கொலை செய்யாதே, என்றும் உன்னைபோல உன் அண்டை விட்டாரை நேசி. ஏழை எளியவர்களுக்கு உன்னால் முடிந்ததை உதவி செய். நேர்மையாக நட, உண்மையை பேசு, அதை இனிமையாக பேசு, எளிமையாக பேசு அன்பாக பேசு, அமைதியாக பேசு, பொறுமையை கைக்கொள்ளாதே. என்று உரைத்தவர். அவர் தன் சுகத்தையும் பாராமல்

மக்கள் சமுதாயம் அல்லலுற்று தவிக்காமல் அமைதியாகவும் ஆனந்தமாகவும் வாழவேண்டுமென்று அவர் பெரிதும் விரும்பினுர். அன்பு கனிந்த வார்த்தைகளால் தீயவர்களையும் திருத்தினுர். பகட்டுக்கும் படாடோபத்துக்கும் முக்கியத்துவம் கொடாமல் நேர்மைக்கும் எளிமைக்கும் முக்கியத்துவம் கொடுத்தார். அறிஞர் அண்ணு அவர்கள் உடலுறுதி உள்ளவர், ஊக்கமும், உறுதிப்பாடும் உடையவர், நெறிதவருதவர், நேர்மையுடையவர், ஆற்றலும், திரமையும் மிக்கவர், எடுத்த காரியத்தை அக்கரையோடும், ஆர்வத்தோடும், செய்து முடிக்கும் இயல்புள்ளவர். இந்த மாபெரும் மேதையை, தமிழர்கள் கண்டெடுத்த மாணிக்கத்தை, நாடு போற்றும் நல்லவரை, உலகம் போற்றும் உத்தமரை, மண்ணில் போட்டு மறைத்து விட்டோம். அண்ணு அவர்கள் ஒரு தீர்க்கதரிசியாக மட்டும் மல்லாமல் சிறந்த ராஜதந்திரியாகவும் விளங்கினுர். அரசியல் நடத்தும் தகுதியும், திறமையும், பெற்றவர். அன்னிய நாட்டான் நம் நாட்டின் மீது படையெடுத்த சமயம், போரில் காயமுற்றோர்க்கு ரத்ததானம் கொடுங்கள் என்று அறைகூவி அழைத்தார்.

ஆண்டவன் புகழுக்குரியவர். அவர் எங்களுக்கு காட்டிய கருணையால் மேன்மை மிக்கவராகவும், புகழ் மிக்கவராகவும், விளங்குகிறோம். தமிழக மக்களாகிய நாம், மற்ற நாட்டினரை விட, மேம்பட்டவர்களாக விளங்குகிறோம். ஆண்டவன் நமக்கு அளித்துள்ள சிறப்புகளையும், மேன்மைகளையும், எடுத்துக் காட்ட நமக்கு ஆற்றல்போதாது. வானத்தையும், பூமியையும், படைத்த இறைவன் நமது ஆட்சியை நிலைக்க, தமிழர்களுக்கு நற்புத்தியை தரவேண்டும். இப்போது அரசியல் நடத்திக் கொண்டிருக்கும் அமைச்சர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை கண்டால் வேறுப்பும் வெறியும் உடையவர்களாகவும், பிடிவாத குணமுடையவர்

களாகவும் திகழ்ந்து வருகிறார்கள் இந்த ஆட்சிக்கு பிறகு திராவிட முன்னேற்ற கழகத்தைவிட ஆட்சிக்கு வர வேறு கட்சி இல்லை என்பதை உங்களுக்கு நினைவு படுத்துகிறேன். நம் நாட்டில் ஒப்பாத பழக்க வழக்கங்கள், அறியாமையினால் மூடபழக்கவழக்கங்களை கடைபிடித்துவருகிறார்கள். ஒருவரோடொருவர்சண்டைபிடிக்கிறார்கள், பொறாமை, நடுவர் மீது ஒருவர் அவதூராக பேசுவதும், விட்டுக் கொடுக்கும் மனமோ, சகித்துப் போகும் தன்மையோ, கிடையாது. இதற்காக நாம் ஒன்று பட்ட சக்தியை திரட்டிக்காட்டி, ஒற்றுமையாக இருந்து, உண்மையான ஜனநாயகத்தை உருவாக்க வேண்டும். மற்ற நாட்டவரை திகைப்பில் ஆழ்த்த வேண்டுமானால், நேர்மை, திறமை, அறிவு, ஊக்கம், இந்த நான்கையும், மனதில் கொண்டால், மனிதன் மாபெரும் காரியங்களையும் சாதித்து விடலாம். என்பது என் நோக்கம். அவனின்றி ஓர் அணுவும் அசையாது. எல்லாம் அவன் செயல். இந்த அரிய பெரிய உண்மைகளை நாம் உணர வேண்டும். இப்பொழுது ஆளும் கட்சி நமக்குச் செய்த பல இன்னல்களை நாம் மறந்து, நம் ஒன்று பட்ட சக்தியை காட்ட வேண்டும். இம்முறை ஆட்சியை மாற்றி அமைக்காவிட்டால் நம்மீது வரி பளுவை சுமத்துவார்கள் என்பதில், எந்தவித ஐயப்பாடுமில்லை.

சென்ற பொதுத்தேர்தலில் வாக்குரிமையில்லாதவர்கள், இந்த முறை வாக்குரிமை பெற்றவர்களாகி நமக்கு வெற்றி வாய்ப்பை தேடி தந்தார்கள். இப்படியாக நாம் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி, இன்று தமிழக அரசின் பீடத்தில் அமரும் வாய்ப்பை பெற்றுயிருக்கிறோம். பல மாதங்களானாலும் சரி, பல வருடங்கள் ஆனாலும் சரி, எடுத்த காரியத்தை நிறைவேற்றியே தீருவோம் என்று எடுத்த சபதம் இன்று முடிந்து

விட்டது. இளைஞர்களாகிய இருந்தவர்கள் இன்று வாக்குரிமைகளை பெற தகுதியுள்ளவர்களாக மாறி, அரசியல் பற்றி நன்கு உணர்ந்து,திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களித்து இருக்கிறார்கள். 1967-ம் ஆண்டு தமிழர்கள் கண் விழித்த நாள், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும், தமிழக மக்கள் அனைவருக்கும், நான் என்றென்றும் கடமைப் பட்டவன். நமக்குள் எந்தவிதமான சண்டை சச்சரவுகள் இருக்க கூடாது என்பதற்காக தோழமை கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்தோம் கொள்கைகள் பல இருப்பினும், ஆளுங்கட்சியை மாற்றியமைக்க வேண்டுமென்பது நம் நோக்கம். அதே போல் தோழமை கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்து, பெரும்பாலான வாக்குகளை பெற்று, வெற்றிப்பெற்று இருக்கிறோம். வெற்றி வாய்ப்பை தேடித்தந்த தோழமைக்கட்சிகளுக்கும், தேர்தல் காலத்திதில் நமக்கு உதவியாக இருந்த கட்சி தோழர்களுக்கும், தோழமை கட்சித்தோழர்களுக்கும், என் மனமார்ந்த நன்றியறிதலை தெரிவித்துக் கொள்ளுகிறேன் என்றார்.

ஒரு தவறு செய்தாலும் அது நாற்பது கோடி மக்களுக்காக செய்வேன் என்று உரைத்த உத்தமர் காந்தியையும் மதம் என்பது மனிதனை நல்வழிப்படுத்துவதற்காக ஏற்பட்ட ஒரு மார்க்கம் போலி மதவாதிகளாய் இராமல், மதவெறியர்களுக்கு செவிசாய்க்காமல், பல்வேறு மதத்தினரும் ஒன்று சேர்ந்து, ஒரே மதம், ஒரே கடவுள், என்று நாம் போற்றினால், உலகில் பூசலும், பிணியும், சண்டையும், சச்சரவுகளும், குறைந்துபோகும் என்று உரைத்த நபிநாயகத்தையும், சிலுவையில் அறைந்து என் உடலை சின்னாபின்னப் படுத்தினாலும், என் கடைசி மூச்சு உள்ளவரை உலக மக்களுக்காக பாடுபடுவேன் என்ற ஏசுவையும், இந்த மாபெரும் தியாகிகள் காட்டிய வழியை நாம் பின பற்றுவோமாக.

ஒரே மனப்பாங்கோடும், தன் உயிரினும் மேலாக, மக்கள் உயிரை பெரிதாக மதித்து, அல்லும் பகலும் உழைத்து, நேர்மையும் ஊக்கமும், உற்சாகமும், தன் மானமும் மிகுந்திய பெருந்தலைவர்களை நாம் மறந்து விட முடியாது. எளிமை, நாவண்மை, நேர்மை, எச்சரிக்கையுடன் இருந்தல், பெருந்தன்மை, தன்னல மின்மை, பிரருக்கு உதவும் பண்பு, உறுதி, ஊக்கம், சோர்வின்மை, நம்பிக்கை, நட்பு, நன்றி மறவாமை, இந்த புண்புகள் அனைத்தும் கற்ற உத்தமர்களை நாம் உயிருள்ளவரை மறக்க முடியாது. அவர்களிடமிருந்த பண்புகளில் எளிமை, வறுமை, நாவன்மை, மக்கள் மீது அவர்கள் கொண்டிருந்த அசைக்க முடியாத அள வற்ற நம்பிக்கை வைத்து இருந்தார்கள். இந்த உண் மைகளை தமிழக மக்களுக்கு எடுத்துரைத்தவர் அறிஞர் அண்ணா. அண்ணா அவர்களுக்கு குழந்தைகளிடம் பிரியம் அதிகம் குழந்தைகளே இறைவனின் நறுமலர் கள் என்று வர்ணிப்பார். பணிவோடும், பண்போடும் யாரிடமும் பழகுவார். அதிகார தோரணையில் அவர் இதுவரை பழகியதே கிடையாது அநியாயம் செய்பவர் களையும், அக்கிரமம் செய்பவர்களையும், பொதுநலத் திற்கு குந்தகம் விளைவிப்பவரையும், கண்டால் நயமாக சொல்லி அவர்களை திருத்த முயல்வார்.

அறிஞர் அண்ணா அவர்கள், திடீரென்று உடல் நலம் சரியில்லாமல் அடையாறு புற்று நோய் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். அண்ணா அவர் மருத்துவ மனையில் சேர்ந்த அன்றே, தமிழக மக்களுக்கு ஓர் பேரிடி, நாளுக்குநாள் அவர் உடல் பலவீனமடைந் தது. இச்செய்தியை அன்றுடம் பத்திரிகைகளில் கண்ட மாபெரும் மக்கள் கூட்டம், அலையலையாக அடையாறு மருத்துவ மனைக்கு சென்றுர்கள்.

வெளியூர்களிலிருந்து லாரிகளிலும், பஸ்களிலும், சைக்கிள்களிலும், ரயில் மூலமும் வந்து கூடிய கூட்ட மும், சென்னை நகர மக்களின் கூட்டமும் ஏராளம்.

பகலென்றும், இரவென்றும், வெயிலென்றும், பனி எனவும் பாராமல் அடிக்கடி அண்ணாவின் உடல்நலம் பற்றி விசாரித்தவண்ணமே இருந்தார்கள். அண்ணா அவர்களும் தமக்குத் திடீரென ஏதாவது நேர்ந்தால் தமிழக மக்கள் உயிரையே விட்டுவிடுவார்கள் என நினைத்து, மூன்று நாட்களாக கொஞ்சங் கொஞ்சமாக மரணத்துடன் போராடி, கடைசியாக தமிழர்களை மறந்து உயிர் பிரிந்தது. இச்செய்தியைக் கேட்ட தமிழக மக்களில் அதிர்ச்சியால் உயிர்விட்டவர் ஏராளம். அன்று காலை ராஜாஜி மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த அண்ணாவின் சடலத்தைக்காண லட்சோபலட்ச மக்கள் ஆறாத் துயரத்தில் கண்ணீர் வடித்த வண்ணம் காத்திருந்தனர். மரக்கிளைகள், மாடிவீடுகள் நடைபாதைகள் அனைத்தும் நிரம்பி வழிந்தன.

இந்தியப் பெருந்தலைவர்களிடமிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் அனுதாபச் செய்திகள் வந்து குவிந்தவண்ணமிருந்தன. மறுநாள் ராஜாஜி மண்டபத்திலிருந்து புறப்பட்ட அண்ணாவின் சடலத்தைக்கண்ட மக்கள் அண்ணா அண்ணா என்று கதறியழுதனர். மவுண்ட்சாலை வழியாக அமைச்சர்களும், தலைவர்களும், பிரமுகர்களுடனும், லட்சோபலட்ச மக்கள் வெள்ளமும் சவ ஊர்வலத்தில் கலந்துகொண்டு மெரினா கடற்கரையை வந்தடைந்தது.

நடமாடும் பல்கலைக்கழகம் "அறிஞர் அண்ணா" என்று போற்றப்பட்டவரை, பல்கலைக் கழகத்தின் எதிரிலேயே, அன்றாடம் மக்கள் சப்தத்தையே கேட்டுக் கொண்டிருந்த அவரை, ஓயாத கடல் அலை சப்தத்தை கேட்டுக்கொண்டிருக்கும்படி கடற்கரை ஓரத்திலேயே கல்லறை செய்துவிட்டோம்.

மக்களால் தேர்ந்தெடுத்த மாவீரனை, தரணியெல்லாம் போற்றும் தாமரை நெஞ்சம் கொண்டவரை, புலவர்களால் போற்றப்பட்ட பேரறிஞரை இந்தக் கல்லறையில் போட்டு புதைத்து விட்டோம். கற்பக விருட்சம், தியாகச்சுடர் என்று போற்றிவந்த அணையாஜோதி அணைந்துவிட்டது குறைந்த விலையில் அரிசிபோட்ட அண்ணன் இருக்கிறார், இனி நமக்கு ஏன் கவலை என நினைத்துக்கொண்டிருந்த தாய்மார்களிடம், என் கடமை முடிந்துவிட்டது, நான் போய் வருகிறேன் என்று கூறி விடைபெற்றுக்கொண்டார் இந்தி கட்டாயப் பாடத்தை தடுத்து நிறுத்திவிட்டார், இனி நமக்கு வேலை இல்லை என்று நினைத்துக் கொண்டிருந்த மாணவர்களிடம், இந்தி இனி வராது, அதற்கு நான் அணைபோட்டுவிட்டேன் என்று கூறி இறுதி யாத்திரை சென்றுவிட்டார்.

தமிழக மக்களை எவ்வளவு துயரத்தையும், புலம்பலையும் அடக்கி வைத்திருந்தாலும், அவரை நினைக்கும்போது, துயரமும், புலம்பலும் பீறிட்டுக்கொண்டு வந்தன. அன்று அண்ணா என்று கதறியவாறு கண்களை குளமாக்கிக்கொண்டு வீடு திரும்பிய மக்கள் கூட்டம் ஏராளம். இவ்வளவு செல்வாக்கை பெற்ற ஓர் உத்தமரை நாம் மறப்பது மிகவும் கடினம். அறிஞர் அண்ணாவின் ஆத்மா சாந்தியடைய, இரவும் பகலும் நாம் ஆண்டவனை பிரார்த்தனை செய்வோமாக. தமிழக மக்களை விட்டு பிரிந்து சென்ற, அண்ணா அவர்களை நினைத்து வருந்துகிறேன் வருந்துகிறோம் வருந்திக் கொண்டேயிருக்கிறோம்.